

# FRIDAY SERMON

**22 FEBRUARY 2019**

**(16 JAMADI'UL AAKHIR 1440 AH)**

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**

**MUNIR AHMAD AZIM**

## "THE YOUTH OF THE UMMAH IN PERIL"

## "மானிட சமுதாயத்தில் இளைஞர்கள் அபாயத்தில்!"

**PART – II**

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

உம்மத்தில் இளைஞர்கள் அபாயத்தில் என்ற விஷயத்தின் இரண்டாவது பகுதியினை அல்லாஹ்வின் அருளால் இன்று நான் தொடர்கிறேன். இளைஞர்கள்

அவர்களுடையதான நிலையில் பூர்த்தி செய்வதற்கான ஒரு பணி உண்டு என கடந்த வாரம் நான் கூறியிருந்தேன். இளைஞர்களின் கரங்களில்த்தான் நமது எதிர்காலம் நிலை கொள்கிறது. உலகமயமாதலின் தீயதாக்கங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கபட வேண்டும். நமது சமுதாய இளைஞர்களின் இஸ்லாமிய நம்பிக்கை பாதுகாக்கப்பட வேண்டும். உலகமயமாதலின் மிகப்பெரிய தீங்குகளில் ஒன்று போதை மருந்துகளாகும். இயற்கை வாயிலான போதை மருந்துகள் அதாவது கஞ்சா செடியிலிருந்துள்ளவைகள், அதை போன்று ஹெரோயின் போன்றவற்றிலிருந்து உற்பத்தி செய்யும் போதை பொருள்வகைகள் மற்றும் செயற்கை வாயிலான போதை மருந்துகள் அதாவது செயற்க்கை வாயிலான கஞ்சா மற்றும் பிற போதை பொருள்வகைகள் போன்றவை அதில் உட்படுகிறது.

போதை மருந்துகள் மெத்தத்தில் உயிருக்கு ஆபத்தானவையாகும். ஆனால் செயற்கை வாயிலான போதை மருந்துகள் நச்சு மற்றும் உயிருக்கு ஆபத்தானவையாகும். இயற்கை வாயிலான போதை மருந்துகளை ஒப்பிட்டு பார்த்தால் செயற்க்கை வாயிலான போதை மருந்துகள் மிக பெரிய அளவு உயிருக்கு ஆபத்தை வழங்குகிறது. ஏனென்றால், நமது இளைஞர்கள் உடலின் உரிமைகளை அந்த போதை மருந்துகள் கொடூரமாக பறித்துக்கொள்கிறது. அவர்களின் இயல்பினை அது அழித்துவிடுகிறது. தொடர்ந்து மனோநோய்களுக்கு அவர்களை அது உள்ளாக்கின்றது. அவர்களின் மரணத்திற்கு கூட அது காரணமாக மாறிவிடுகிறது.

நாம் இப்போது ஒரு உண்மையான பிரச்சினையினை சந்திக்கின்றோம். இக்காரியத்தில் நாம் மிக ஜாக்கிரதை செலுத்தாமலிருந்தோமோயானால், அதன் பொறியில் நாம் வீழ்ந்து விடுவோம். பின்னர் நமது சமுதாயத்தின் நிலை என்னவாகும்? நமது உலகின் எதிர்காலம் என்னவாகும்? இளைஞர்களின் எதிர்காலத்திற்கான பொறுப்பினை நாம் அல்லாஹ்விடம் ஒப்படைக்க வேண்டும். இக்காரியத்தில் மிக பயங்கரமான ஒரு சிலிர்ப்பினை நான் உணர்கின்றேன். அதை போலவே நான் அச்சத்தால் நடுங்குகிறேன், ஏக்கமுடையவனாக இருக்கின்றேன். ஏனெனில் இந்த பிரச்சினை நமது இளையதலைமுறைகளை அழித்துக் கொண்டிருக்கிறது.

## “Finding Solutions”

## “தீர்வுகளை கண்டுபிடித்தல்”

பள்ளிகூடங்களில் விளையாட்டுக்கு மிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என நான் அரசாங்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். எல்லா மத தலைவர்களும், சமூக சேவகர்களும், போதை மருந்துகளின் தீங்கினைக் குறித்து இளைஞர்களுக்கு போதுமான விழிப்புணர்வை வழங்கவேண்டும். அதை போலவே பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளின் சமூக வாழ்கையின் மீது கவனம் வைத்துக் கொள்ளவேண்டும். எத்தகைய நண்பர்களிடம் அவர்கள் தொடர்பு கொள்கின்றனர். அவர்கள் எங்கு செல்கின்றனர் என்பதை கவனிக்க வேண்டும். ஏனெனில் இந்த அபாயம், ஆண்பிள்ளைக்களைப் போன்றே பெண்பிள்களையும் பாதிக்கிறது.

வல்லரசு நாடுகளும் அரசாங்கங்களும், மனித வாழ்கையின் பல்வேறு துறைகளில் தங்களது மேலாதிக்கத்தை விரிவுபடுத்த நினைக்கின்றனர். சாத்தியமான ஒவ்வொரு வாய்ப்பினையும் அவர்கள் பயன்படுத்த முயல்கின்றனர். அக்காரியத்திற்கு அவர்கள் மிக முக்கியத்துவம் அளித்து வருகின்றனர்.

இரண்டாவதாக, இத்தகைய வல்லரசு நாடுகள் சுரண்டல்களை தொடர்வது, அவர்களின் தொழில் நுட்பங்கள் வழியாகும். எல்லா வகையான தடைகளையும் வென்று அவர்கள் முன் செல்லுகின்றனர். தொழில்நுட்ப துறையினை அவர்கள் விரிவுப்படுத்துகின்றனர். அவர்களின் பயற்சிகள் அவர்களின் திறன்களை மேலும் அதிகரிக்க செய்கிறது. அவர்களின் திறன் மற்றும் நாட்டம் ஒரு புறம் அதிகரிக்கும் போது, மறுபுறம் மனித வாழ்கையின் மீதான அவர்களின் மேலாதிக்கம் மேன்மேலும் ஆற்றலைப் பெறுகிறது. அவர்களின் இலக்கு, முஸ்லீம் இளைஞர்களாவார்கள். இந்த ஆய்வு ஒரு உண்மையினை மறைக்கவில்லை. அதாவது உலகமயமாதல் நன்மைகளையும், தீமைகளையும் கொண்டுள்ளது. அதன் நன்மை என்பது விஞ்ஞானம் மற்றும் அறிவினை பரவ செய்கிறது. மக்கள் இடையே இணைப்பு வசதியினை உருவாக்கின்றது. இந்த

நவீன வளர்ச்சியின் விளைவாக நிகழும் அபாயங்களைக் குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. இது மூலம் இஸ்லாமிய இளைஞர்கள் முற்றிலும் சுரண்டப்படுகின்றார்கள்.

## Danger / அபாயம்

அவர்கள் பலவிதங்களில் அருவருப்பானவற்றை பரப்பிக் கொள்கின்றார்கள், அதனை ஊக்குவிக்கின்றார்கள். அது உலக இளைஞர்கள் மற்றும் இஸ்லாமிய இளைஞர்களை சென்றடைகிறது. இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. அதாவது அது இஸ்லாமிய சிந்தகர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒரு சவாலாக எழுப்பியுள்ளது. இது குறித்து இளைஞர்களுக்கு விளக்க வேண்டிய வலுவான மற்றும் பயனுள்ள வழிகளை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது உலகமயமாதல் அவர்களின் சேவைக்கு அளித்திருக்கும் இந்த நவநாகரீக தொழில் நுட்பங்களில் மிக பெரிய அபாயங்கள் மறைந்திருக்கின்றது. அது அவர்களின் நம்பிக்கை, இதயம் மற்றும் பக்தியினை அபாயப்படுத்தும் நிலையில் அமைந்திருக்கிறது.

எனவே, இந்த நவீன நாகரீக தொழில் நுட்பங்களை பயன்படுத்துவது நல்லதுதான். ஆனால் இதனை மிக கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். இவற்றிலுள்ள நல்லவற்றினை எடுத்துக்கொள்ளுங்கள். தீயதினை தவிர்த்துக் கொள்ளுங்கள். இஸ்லாமிய இளைஞர்களுக்கு அது விளைவிக்கும் சேதங்களைப்பற்றி இஸ்லாமிய சிந்தகர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் மட்டுமல்ல மாறாக நாம் அனைவரும் ஆன்மீக தலைவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசாங்கங்கள் போன்ற எல்லோரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது சமுதாயத்தை சார்ந்த இளைஞர்களை பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## How?/ இதை எவ்வாறு நிறைவேற்றலாம்?

இது மிக முக்கியமான ஒரு கேள்வி ஆகும். எதிர்கால வாழ்க்கையினை பாதுகாப்பதற்கு ஒரு இஸ்லாமிய கடமையினை நாம் ஏற்றெடுக்க வேணடும் அதற்காக இதனை நாம் உங்கள் முன்னிலையில் சமா்ப்பிக்கிறேன்.

- ❖ இந்த சமுதாயத்தை சாா்ந்த இளைஞாகளுக்கு விழிப்புணா்வை வழங்க வேண்டும். இஸ்லாம் மதம் என்பது மிக திறந்ததும் எளிதானதும் நடைமுறையானதுமாகும். இவ்வுலக வாழ்க்கையிலும், மறு உலக வாழ்க்கையிலும், மக்கள் நன்மை மற்றும் மகிழ்ச்சினை பெற வேண்டும் என்பதை இஸ்லாமிய மார்க்கத்தின் இலக்காகும்.
- ❖ இஸ்லாம் என்பது மாா்க்கங்களில் முற்றிலும் இறுதியான மார்க்கமாகிறது. இதில் எந்த வேற்றுமையுமில்லை. முழுமையாக இஸ்லாம் மிக சிறந்த மாா்க்கமாகிறது. இஸ்லாமின்றி வேறு எந்தவொரு மாா்க்கத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை.
- ❖ இஸ்லாமின் பல்வேறு நிலையிலான சிறப்புதன்மைகளைக் குறித்த சொற்பொழிவுகள் மூலம் விளக்க வேண்டும். நல்லொழுக்கமின்மை, இறைநிந்தனை, நயவஞ்சகம் போன்றவகையான கொடூரமான நோய்களுக்கு எதிராக விழிப்புணா்வு செய்யும் பணிகளில் ஈடுபடவேண்டும். இது மானிட சமூகத்தை முற்றிலும் அழித்துவிடும் நோய்கள் ஆகும்.
- ❖ கொள்கையினை பாதுகாக்க வேண்டும். இஸ்லாம் ஒரு போதும் சுயம் திரும்பி செல்வதை நியாயப்படுத்துவதில்லை. உலகின் முன்னிலையிலும், இந்த அற்பமான வாழ்கையின் முன்னிலையிலும் திறந்த மனதுடன் இஸ்லாம் நிலை கொள்கிறது.

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்.

**“வானங்களிலுள்ளவற்றையும் பூமியிலுள்ளவற்றையும் அல்லாஹ் உங்களுக்காக பணி செய்ய வைத்து, உங்களுக்கு தன் அருட்கொடைகளை**

**வெளிப்படையாகவும், மறைமுகமாகவும், முழுமைப்படுத்தியிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? "(31:21)**

**"நீர் கூறுவீராக: அல்லாஹ் தன் இடியர்களுக்காக ஆக்கியுள்ள அழகுப் பொருள்களையும், உணவில் தூய்மையானதையும் விலக்கப்பட்டதென ஆக்கியவன் எவன்?" (7: 33)**

நாம் விரும்பும் இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை உம் மதத்தை சார்ந்த இளைஞர்களுக்கு நாம் புரிய வைக்க வேண்டும். உலகமயமாதலினை நமக்கு வரவேற்று கொள்வோம். ஆனால் இளைஞர்களை பொறுத்தவரையில் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனபதை குறித்து மிக கவனம் இருக்க வேண்டும். இஸ்லாமின் தத்துவத்திற்கு எதிரானவையினை நாம் தவிர்த்து கொள்ள வேண்டும். நம் நம்பிக்கைக்கு கேடு விளைவிக்கும் ஏதென்றையும் ஏற்று கொள்ளாமல் இருக்க வேண்டும். சரியான இஸ்லாமிய வாழ்க்கையின் உண்மையின் பால் எந்த சந்தேகத்துனுடைய நிழலும் வீழாமல் கவனிக்க வேண்டும். மௌரிஷியஸ் மற்றும் உலகொங்கும் உள்ள மத ஞானிகள், கல்வி துறை நிபுணர்கள், இம்மாம்கள் ஆகியோர்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். நமக்கு இந்த பூமியை முழுவதும் உழுது, மிக கடினமான முறையில் உழைப்போம். உலகமயமாதலின் நல்ல மற்றும் கெட்ட பக்கங்களை சமுதாயத்தை சார்ந்த இளைஞர்களுக்கு புரிய வைப்போம். இந்த சிரமகரமான கடமையினை நிறைவேற்றுவதற்கு அனைத்து குடும்பங்களும், எல்லா பள்ளிகூடங்களும், மீடியாக்களும் மற்றும் பல்வேறு துறைகளில் செயலற்றி வரும் சமூகசேவகர்களும், மசூதிகளும் தயராக வேண்டும். கல்வியின் முக்கியத்துவமும், மத கலாச்சாரமும், இளைஞர்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும். உலகமயமாதலின் அபாயங்களை பற்றிய விழிப்புணர்வை அவர்களுக்கு வழங்க வேண்டும். இந்த உண்மையினை இளைய தலைமுறைகள் அங்கீகரித்த கொள்ள வேண்டும். நம் கடமையினை ஏற்றெடுத்து அதனை செயல்முறையில் கொண்டுவர வேண்டும். இது உலகெங்கும் அமல்படுத்த வேண்டிய காரிமாகும். உலகெங்குமுள்ள் எல்லா சமூதாயங்களும். இத்துறையில் மிக விரைவில் ஒரு முன்னேற்றம் நடத்த வேண்டும். அவ்வாறேயானால் மத கோட்பாடுகள் எந்த விதத்திலும் நிராகரிக்கப்படுவதில்லை. மத கோட்பாடுகளை

நிராகரிக்கும் நிலை உருவாகி விட்டால் குறிப்பாக இளைஞர்கள் முற்றிலும் லௌகீகத்தின் ஆழங்களில் வீழ்ந்து விடும் மனோநிலையை அடைவார்கள்.

இது சமூதாயத்தின் முழுமையான மதிப்பை அச்சுறுத்தும் விதமாக இருக்கிறது. மட்டுமன்றி அது சமூதாயத்தில் ஆழமான சேதத்தை விளைவிக்கும். அது பெரிய அளவில் பாதிப்பை உம்மத்தில் விளைவிக்கும். இவ்வழியில் நமக்கு முயற்சிகளை மேற்கொள்ளுவோம். தூவா செய்வோம். அல்லாஹ்வின் உதவியில்லாமல், அதற்கு தேவையான நடவடிக்கைகளை செய்ய நமக்கு முடியாது. இளைஞர்களை நேர்வழியில் நடத்துவதற்கும் அதில் வெற்றியடைவதற்கும் நமக்கு முடியாது. இந்த அர்ப்பமான உலகின் அனைத்து தீங்குகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்கும் நமக்கு முடியாது.

அல்லாஹ் நமது பலவீனங்களை விலக்கிக் கொள்வானாக! நாளைக்காக, நாளைய சமுதாயத்திற்காக, நமது இளைஞர்களின் நல்ல எதிர்காலத்திற்காக சிறந்த முறையில் செயல்படுவதற்கான வழிமுறைகளை அவன் நமக்கு வகுப்பானாக! அல்லாஹ்விடம் இணைந்திருப்பதற்கு நமக்கு அவர்களை ஊக்குவிப்போம். இஸ்லாமிடம் சோர்ந்திருக்க நமக்கு அவர்களை ஊக்குவிப்போம். உலகமயமாதலின் தீங்குகளிலிருந்து விலகிகொள்வதற்கு அவர்களை ஊக்குவிப்போம். இந்த உலகின் தற்காலிகமான பௌதீக இன்பங்களிலிருந்து நமக்கு அகன்று நிற்போம். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY


**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774



**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**